01.04.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 6/2026</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஷால் | | |
| த/பெ | சரவணன் | | |
| கிராமம் | திருவெண்ணைநல்லூர் | தொழில் | IT ஊழியர்<br>சென்னை |
| தாலுக்கா | திருவெண்ணைநல்லூர் | வயது | 24 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 01.04.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னை பெருங்குடியில் இயங்கி வரும் காக்னிசென்ட் நிறுவனத்தில் டிசைனராக பணி செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்து என் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, திருவெண்ணைநல்லூர் மணக்குள விநாயகர் மருத்துவமனை அருகில் இரவு சுமார் 7.00, 8.00 மணியளவில் சில நபர்கள் என்னை தாக்கினார்கள். இருட்டு நேரம் என்பதால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. நான் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு, மறுநாள் காலை திருவெண்ணைநல்லூர் காவல் நிலையம் சென்று, விவரம் சொன்னேன். காவல் நிலையத்தார் என்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும், எழுத்து மூலமான புகாரில் உள்ள கையெழுத்து

என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிகளில் யாராவது அன்று அங்கு இருந்தார்களா? என்றால் இல்லை. என்னை யாரும், எங்கும், எதிலும், கடத்திச் செல்லவில்லை. இது சம்பந்தமாக அதன் பிறகு என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

விழுப்புரத்தை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரின் மகளும், மிதுன் என்கிற மிதுன் ராஜ், என்பவரின் சகோதரியுமான ராகவி என்பவரிடம் நான் பேச்சுவார்த்தையில் இருந்தேன் என்றும், சந்தேகப்பட்ட மிதுன் பலமுறை என்னை எச்சரித்தார் என்றும், கடந்த 22/06/2021-ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் நான் TN33 BP 2446 என்ற மோட்டார் சைக்கிளில் திருவெண்ணெய்நல்லூர் மணக்குள விநாயகர் மருத்துவமனை அருகே சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது மிதுனின் நண்பர்களான அருணாச்சலம் மகன் அருண், ஏழுமலை மகன் அருண்குமார், ஆகியோர் என்னை வழிமறித்தார்கள் என்றும், என் மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துக் கொண்டார்கள் என்றும், என்னை அழைத்துக் கொண்டு மிதுனை பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு சென்றார்கள் என்றும், அப்போது PY 05 E 2507 என்ற போலினோ கார் வந்து நின்றது என்றும், அதில் விழுப்புரத்தை சேர்ந்த மிதுன் என்கிற மிதுன் ராஜ், கணேசன், இமான், விமல், ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், அருளும், அருள்குமாரும், காருக்கு அடியில் என்னை தலைமுடியை பிடித்து இழுத்து சென்றார்கள் என்றும், மிதுன் ராஜ் ராகவியிடம் பழகுவதை விட மாட்டாயா? என்று கேட்டு சவுக்கு தடியால் தலையில் தாக்கினார் என்றும், நான் தடுத்த போது அந்த அடி என் இடது கையில் விழுந்தது என்றும், சுமார் 4.30 மணியளவில் என்னை கடத்தி சென்று விழுப்புரம் அருகே ரயில்வே டிராக் முடியும் இடத்தில் வைத்து கணேஷ் நைலான் கைற்றால் எனது இரு கைகளையும் கட்டிப்போட்டு, இரும்பு பைப்பால் கையில் ஓங்கி அடித்தார் என்றும், இமான் நீ செத்துப் போடா தேவிடியா பையா என்று சொல்லி தடியால் இடது கைவிரல்களில் அடித்தார் என்றும், மாலை சுமார் 5-00 மணியளவில் மிதுன் ராஜ் வீட்டின் அருகில் அரை மணி நேரம் காருக்குள்ளேயே வைத்திருந்தார்கள் என்றும், அப்போது

விமல் கையால் எனது முதுகிலும், மார்பிலும், முகத்திலும், மாறி மாறி குத்தினார் என்றும், அப்போது இருட்டிவிட்டது என்றும், அவர்கள் ஏமாந்திருந்த நேரத்தில் நான் அங்கிருந்து தப்பித்தேன் என்றும், பிறகு எனது உறவினர் தீபா வீட்டிற்கு சென்றேன் என்றும், பிறகு எனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்தும், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டேன் என்றும், மறுநாள் 23/06/2021 ம் தேதி காலை 6.30 மணியளவில் எழுத்து மூலமான புகாரை கொடுத்துக் கொண்டேன் என்றும், இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>இல்லை.</u>

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>